செய்தி வெளியீடு எண். 35-2016 நாள்: 19.10.2016

**விழுப்புரம் மாவட்டம் குழந்தைகள் காப்பக பணியாளர்கள் மற்றும் காப்பக உதவியாளர்கள் பணியிடங்களை தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.**

******

விழுப்புரம் மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், செயல்படும் 23 குழந்தைகள் காப்பகங்களுக்கு, 23 காப்பக பணியாளர்கள் மற்றும் 23 காப்பக உதவியாளர்கள் பணியிடங்களுக்கு இன சுழற்சி முறையில் நேரடி நியமனம் செய்திட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்மந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக தகவல் பலகையில் தெரிவிக்கப்பட்ட பணியிடங்களுக்கான இன சுழற்சி ஒதுக்கீட்டினை தெரிந்து கொண்டு தகுதியானவர்கள் விண்ணப்பத்தில் பணி கோரும் இடத்தினை குறிப்பிட்டு உரிய விண்ணப்ப படிவத்தில் பூர்த்தி செய்து கேட்கப்பட்ட சான்றுகளுடன் 07.11.2016 மாலை 5.45 மணிக்குள் சம்மந்தப்பட்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம் அல்லாத மற்ற அலுவலகங்களில் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் மற்றும் குறிப்பிட்ட நாட்களுக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. திருமணமான பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஊதிய விகிதம் தொகுப்பூதிய அடிப்படையில் குழந்தைகள் காப்பக பணியாளர் பணிக்கு மாதம் ரூ.3000/- மற்றும் குழந்தைகள் காப்பக உதவியாளர் பணிக்கு மாதம் ரூ.1500/- வழங்கப்படும்.

குழந்தைகள் காப்பக பணியாளர்களுக்கு 01.07.2016 அன்று 25 முதல் 35 வயது வரை உள்ளவராகவும், விதவை எனில் 40 வயது உள்ளவராகவும், மாற்றுத் திறனாளி எனில் 38 வயதுக்குள் உள்ளவராகவும் இருக்க வேண்டும். S.S.L.C. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குழந்தைகள் காப்பகம் அமைந்துள்ள இடத்திற்கு 3 கி.மீ. பகுதிக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

குழந்தைகள் காப்பக உதவியாளர்களுக்கு 01.07.2016 அன்று 20 முதல் 40 வயது வரை உள்ளவராகவும், விதவை எனில் 45 வயது உள்ளவராகவும், மாற்றுத் திறனாளி எனில் 43 வயதுக்குள் உள்ளவராகவும் இருக்க வேண்டும். தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். குழந்தைகள் காப்பகம் அமைந்துள்ள இடத்திற்கு 3 கி.மீ. பகுதிக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் சான்றொப்பம் இடப்பட்ட கல்வி மாற்றுச் சான்றிதழ், மதிப்பெண் சான்றிதழ், வட்டாட்சியரால் வழங்கப்பட்ட சாதி சான்றிதழ், இருப்பிட சான்று மற்றும் விதவை, கணவரால் கைவிடப்பட்டவர், மாற்றுத்திறனாளி எனில் அதற்கான சான்று மற்றும் விண்ணப்பதாரரின் புகைப்படம் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.